## பல் பிடுங்கிய விவகாரம்

# மாவட்ட நீதிபதி விசாரணை நடத்த வேண்டும்

## மக்கள் கண்காணிப்பக தலைவர் பேட்டி

நெல்லை, ஏப். 2: பல் பிடுங்கிய விவகாரம் தொடர்பாக மாவட்ட நீதிபதி விசாரணை நடத்த வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக காவல் சித்ரவதைக்கு எதிரான கூட்டு இயக்கம் சார்பில் மக்கள் கண்காணிப்பக தலைவர் ஹென்றி டிபேன், மார்க்சிஸ்ட் மாநில குழு உறுப்பினர் பாஸ்கரன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் ரசூல்மைதீன் ஆகியோர் நெல்லையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அம்பை காவல் நிலையம் மற்றும் சில காவல் நிலையங்களில் பல்வேறு வழக்குகளில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்களை அம்பை ஏடிஎஸ்பி பல்பீர்சிங், பொறுப்பேற்ற நாளில் இருந்து சித்ரவதை செய்துள்ளார் என்பதை பாதிக்கப்பட்டவர்களின் வாக்குமூலம் மற்றும் சம்பந்தப்பட்டவர்களின் சாட்சிகள் மூலம் அறிய முடிகிறது. இதுவரை 48 நபர்களின் பற்கள் உடைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.



மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் கண்காணிப்பாளர், சிசிடிவி காமிரா பதிவுகளை கைப்பற்றி ஆவணப்படுத்த வேண்டும். இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்ததுமே மாவட்ட கலெக்டரே விசாரணை அதிகாரியாக செயல்பட்டு நேரடி விசாரணை நடத்தியிருக்க வேண்டும். எஸ்பி, மாஜிஸ்திரேட்டு ஆகியோரும் விசாரணை நடத்த வேண்டும். சம்பந்தப்பட்ட நபர் உயர் காவல் அலுவலர் என்பதால் மாவட்ட நீதிபதி தலைமையில் விசாரணை நடத்த வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் நடந்த சம்பவங்களை சாட்சியமாக தெரிவிக்க வருபவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும். உச்சநீதி மன்றம் ஏற்கனவே தெரிவித்த விசாரணை தொடர்பான உத்தரவுகளை காவல் நிலையங்கள் சரியாக பின்பற்றுகிறதா? என்பதை அரசு கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினார்.

பேட்டியின் போது மார்க்சிஸ்ட் மாவட்ட செயலாளர் ஸ்ரீராம், இந்திய கம்யூ. மாவட்ட செயலாளர் லட்சுமணன், சிபிஐ (எம்.எல்) மாவட்ட செயலாளர் சுந்தர்ராஜன், விடுதலை சிறுத்தை கட்சி மத்திய மாவட்ட செயலாளர் கரிசல் சுரேஷ், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆரிப் பாட்ஷா, முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம் நாறும்பூநாதன், திராவிடர் தமிழர் கட்சி கதிரவன், தமிழர் உரிமை மீட்பு கழகம் கணேச பாண்டியன், எஸ்டிபிஐ செயலாளர் அன்வர் பாஷா, முஸ்லிம் முன்னணி கழகம் பிலால், கலைக்கண்ணன், கவுன்சிலர் முத்து சுப்பிரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.